**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், செஞ்சி**
**முன்னிலை: திருமதி.B.வித்யா,L.L.M.,**
**குற்றவியல் நீதித்துறை நடுவர், செஞ்சி.**
**வழக்கு எண்.C.C. 17/2021**

2025 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 17 ம் தேதி செவ்வாய் கிழமை குற்றம் முறையிடுபவரின் சார்பாக வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54 வது விதியின் ஏற்பாட்டின்படி) உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

**அ.சா.3**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முனுசாமி | தொழில் | : அரசுப்பணி ஓய்வு |
| தந்தை பெயர் | : முனுசாமி | | |
| கிராமம் | : பெரியகடை, செஞ்சி | வயது | : 76 |

சாட்சியையும் எதிரியும் செஞ்சி காவல் நிலையத்தின் நீதிமன்ற காவலர் திரு.அ.சுரேந்தர் Gr.1 – 2474 என்பவரால் அடையாளம் காட்டப்பட்டது.

**( எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

**1.** நான் செஞ்சியில் வசித்து வருகிறேன்.இவ்வழக்கு விபத்தில் இறந்த குலசேகரன் என்பவர் எனது மகன்.

2. கடந்த 25.11.2019 தேதியன்று காலை 09.00 மணிக்கு செஞ்சி காடு அருகே எனது மகன் இருசக்கர வாகனத்தில் செல்லும்போது எதிரே வந்த கார் மோதியதில் எனது மகன் குலசேகரனுக்கு தலையிலும், காலிலும் அடிப்பட்டது. அப்பொழுது நான் ஒதியத்தூரில் இருந்தேன். ஆறுமுகம் மகன் பழனிவேல் என்பவர் விபத்து நடந்த இடத்தில் இருந்து எனக்கு தகவல் சொன்னார். பின்னர், செஞ்சி அரசு மருத்துவமனை சென்று எனது மகன் குலசேகரனை பார்த்தேன். அப்பொழுது எனது மகன் வலி இருப்பதாக என்னிடம் கூறினார். பின்னர், சிகிச்சை பலனின்றி எனது மகன் மருத்துவமனையில் இறந்துவிட்டார். பின்னர் எனது மகன் பிரேத பரிசோதனை செய்தார்கள். காவலர்கள் என்னை விசாரித்தனர்.

**எதிரி தரப்பு குறுக்குவிசாரணை:**

3. விபத்து நடந்தபோது நான் ஒதியத்தூரில் இருந்தேன் என்றால் சரிதான். சம்பவ இடத்தில் இருந்து ஒதியத்தூர் சுமார் 7 கி.மீ தூரத்தில் அமைந்துள்ளது. விபத்து நடந்ததாக பழனிவேல் என்பவர் என்னிடம் கூறினார். இந்த விபத்து யாரின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்ற

விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். காவலர்கள்எ ன்னை காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தனர் என்றால் சரிதான். என்னிடம் விசாரித்து கையொப்பம் பெற்றனர்.

**மறுவிசாரணை:** இல்லை

என்னால்/என் முன்பாக பதியப்பட்டு,
சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/
படித்து காண்பிக்கப்பட்டு அது சரி
என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது.

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
செஞ்சி.